இரத்தினபுரி மாநகர சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினபுரி மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து இரத்தினபுரி மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான

கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	ரூபா 16,585,615 தொகையான வீதிப் பழுதுபார்ப்பு செலவுகளின் மூலதனமாக்கல் காரணமாக, மீளாய்வாண்டின இறுதியில் நடைமுறை அல்லாத சொத்துக்கள் மற்றும் மூலதனத்திற்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கு ஆகியன அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	இந்த விடயம் தொடர்பில் மீள ஆராய்ந்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	கணக்குகள் திருத்தப்பட வேண்டும்.
(ஆ)	கனதோல பயிற்சி மையத்தின் கூரை தயாரிப்புத் கைத்தொழில் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 1,474,203 இனால் அதிகரித்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், மேலும் முடிக்கப்பட்ட பணியின் மதிப்பு ரூபா 433,646 அதிகமாகக் மூலதனமாக்கப்பட்டிருந்தது.	பேரேட்டுப் பதிவுகள் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	கணக்குகள் திருத்தப்பட வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,842,562 மதிப்புள்ள 04 தொழில்கள் மூலதனமாக்கப்படவில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் திருத்தப்படும் என்பது.	கணக்குகள் திருத்தப்பட வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டில் பணிகள் நிறைவு செய்யப்பட்ட மொத்த மீன் சந்தையின் முடிக்கப்பட்ட பணியின் மதிப்பு ரூபா 2,723,119 ஆல் அதிகமாக மூலதனமாக்கப்பட்டுள்ளது.	பேரேட்டுப் பதிவுகள் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	கணக்குகள் திருத்தப்பட வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டில் பணிகள் நிறைவு செய்யப்பட்ட இரத்தினபுரி பொது சந்தையின் மேல் தளத்தின் கட்டுமானத்தின் மதிப்பு ரூபா 18,831,160 குறைவாக மூலதனமாக்கப்பட்டுள்ளது.	பேரேட்டுப் பதிவுகள் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	கணக்குகள் திருத்தப்பட வேண்டும்.
(ஊ)	02 வாகனங்களின் மதிப்பு ரூபா 30,200,000 அதிகமாக மூலதனமாக்கப்பட்டுள்ளது.	பேரேட்டுப் பதிவுகள் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	கணக்குகள் திருத்தப்பட வேண்டும்.
(எ)	இரத்தினபுரி ரத்தின வீதியை அபிவிருத்தி செய்யும் பணிக்காக மாகாண சபையிலிருந்து பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 5,276,986 ஆல் அதிகமாகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.	மீள ஆராய்ந்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	கணக்குகள் திருத்தப்பட வேண்டும்.

1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
05 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் துணைப் பதிவேடுகளின் படியாயான மீதிக்குமிடையே ரூபா 20,901,614 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	பதிவேடுகளின் குறைபாடுகள் இனங்காணப்பட்டு 2025 ஆம் ஆண்டின் போது இறுதிக் கணக்குகளுக்கு சரியான கணக்கு மீதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.	வேறுபாட்டுக்கான காணரங்கள் இனங்காணப்பட்டு கணக்குகள் திருத்தப்பட வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரை	சிபாரிசு
(அ)	1987 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247 (1அ)	நகர சபையின் எல்லைக்குள் செயல்படும் தொழில் வல்லுநர்கள் அடையாளம் காணப்பட்டு, தொடர்புடைய தொழிலுக்கு செலுத்த வேண்டிய வரி வசூலிக்கப்படவில்லை.	உள்ளூராட்சி ஆணையாளரால் சட்டப் பிரிவுக்குத் தகவல் அளிக்கப்பட்டுள்ளது என்பது, மேலும் பெறப்பட்ட முடிவுகளின்படி மேலும் நடவடிக்கை எடுக்கப்படும்.	மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிராகாரம் செயற்பட வேண்டும்.
(ஆ)	1998 திசெம்பர் 10 ஆந் திகதிய 98/3 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை	2000, 2001 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நகர சபையால் குத்தகைக்கு விடப்பட்ட 12 கடைகளுக்கு ஒப்பந்தங்கள் செய்யப்படவில்லை.	இந்த 12 கடைகளுக்கு இதுவரை எந்த ஒப்பந்தங்களும் செய்யப்படவில்லை.	சுற்றறிக்கையின் பிராகாரம் செயற்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 2,026,801 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 65,567,753 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீடு செய்த வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

வருமான மூலம்	2024 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை	2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம	திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீத வரியும் வரியும்	39,615,000	38,654,168	42,221,090	39,321,223	35,800,000	40,242,108	41,336,757	38,436,194
வாடகை	93,154,000	83,498,308	81,582,104	27,328,523	73,181,000	74,250,118	71,876,826	34,800,242
அனுமதிப்பத்திர கட்டணம்	19,200,000	20,621,546	21,008,997	9,158,835	18,485,000	17,954,340	15,560,390	9,285,500
ஏனைய வருமானம்	106,538,000	106,295,363	101,579,985	-	114,306,000	95,783,213	93,617,268	7,464,313
மொத்தம்	258,507,000	249,069,385	246,392,176	75,808,581	241,772,000	228,229,779	222,391,241	89,986,249

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமானத்தை சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
(அ)	மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையில் உள்ள வீத வரி மீதி ரூபா 30,106,640 ஆக காணப்பட்டதுடன், நிலுவையில் உள்ள மீதி தொகை தொடர்பாக காலப் பகுப்பாய்வை வழங்க சபை தவறிவிட்டது.	தற்போதைய மதிப்பீட்டு மென்பொருளால் இது தொடர்பான காலப் பகுப்பாய்வை வழங்க முடியாது என்றும், நிலுவையில் உள்ள வீத வரியை அறவிடுவதற்கு பல்வேறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.	காலப் பகுப்பாய்வுகளைத் தயாரித்து நிலுவையில் உள்ள வருமானத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	பொதுச் சந்தை வளாகத்தில் உள்ள 26 கடைகளுக்கான புதிய மதிப்பீடு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து 2023 ஏப்ரல் 06 ஆந் திகதி பெறப்பட்டாலும், அதே மதிப்புகளை வசூலிக்காமல் பழைய மதிப்பீட்டு வாடகையைத் தொடர்ந்து வசூலித்ததால் 2023 மே முதல் 2024 திசெம்பர் இழக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 6,450,720 ஆகும்.	கடைகளின் தற்போதைய திட்டமும் வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையும் ஒப்பிடத்தக்கதா என்பது குறித்து விலைமதிப்பீட்டு திணைக்களத்திடம் அறிக்கை பெறப்படும் என்றும், மேற்கூறிய அறிக்கையின்படி 2023 மே முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் வாடகை வசூலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	குத்தகை ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட்டு, 05 வருடங்களுக்கு ஒரு தடைவை கடைகள் மதிப்பிடப்பட்டு, கடை வாடகை வசூலிக்கப்பட வேண்டும்.
(இ)	125 கடைகளின் குத்தகைதாரர்களுடன் செய்து	இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட குழு	குத்தகை ஒப்பந்தங்கள்

	கொண்ட ஒப்பந்தங்களின் செல்லுபடியாகும் காலம் காலாவதியாகிவிட்டாலும், 2025 மே மாதம் வரையிலும் புதிய ஒப்பந்தங்கள் செய்யப்படவில்லை. மேலும், கடை வாடகையை திருத்துவதற்காக கடைகள் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பிடப்பட வேண்டும் என்றாலும், சபைக்கு சொந்தமான 195 கடைகளின் மதிப்பீடு அந்த வகையில் மேற்கொள்ளப்படவில்லை.	திருத்தப்பட்ட ஒப்பந்தத்தைத் தயாரித்து வருவதாகவும், மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற மீண்டும் ஒரு நினைவூட்டல் வெளியிடப்படும் என்றும், மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட்ட பிறகு புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை வசூலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	புதுப்பிக்கப்பட்டு, 05 வருடங்களுக்கு ஒரு தடவை கடைகள் மதிப்பிடப்பட்டு, கடை வாடகை வசூலிக்கப்பட வேண்டும்.
(ஈ)	மாநகர சபைக்குச் சொந்தமான 60 கடைகளிலிருந்து 2024 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 4,133,755 ரொதகையான நிலுவை கடை வாடகை தொடர்பாக நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) பிரிவு 155 இன் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	குத்தகைதாரர்களுடன் கலந்தாலோசித்து நிலுவைத் தொகையை வசூலிக்க ஒரு காலக்கெடுவின்படி பணம் செலுத்தும் முறை தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி நிலுவைத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்.	நிலுவைத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	மூன்று வாகன நிறுத்துமிடங்களில் தரிப்பிடக் கட்டணம் வசூலிப்பதற்கான விலைக்கேள்வியை பெற்ற குத்தகைதாரர் ஒப்புக்கொண்டபடி மாதாந்த கட்டணத்தை செலுத்தவில்லை, மேலும் விலைக்கேள்வி ஒப்பந்தத்தின் பிரிவு 14 இன் படி, 14 நாட்களுக்குள் விலைக்கேள்வியை இரத்து செய்து பாதுகாப்பு வைப்புத்தொகையிலிருந்து நிலுவைத் தொகை ஈடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் ரூபா 510,229 இழப்பு ஏற்பட்டுள்ளது.	நிலுவைத் தொகைக்கு வைப்புத்தொகையை ஈடுசெய்து நிலுவைத் தொகையைத் தீர்க்கவும், மீதமுள்ள நிலுவைத் தொகையை செலுத்தவும் வழக்கறிஞர் மூலம் குத்தகைதாரருக்கு அழைப்பாணை வழங்கப்பட்டு, இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	விலைக்கேள்சியை இரத்து செய்து நிலுவையில் உள்ள கட்டணங்களை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	கடந்த ஆண்டில் 103 நிறுவனங்களின் 149 விளம்பரப் பலகைகளுக்கு உரியதாக அறவிடப்பட வேண்டிய ரூபா 4,255,250	கடந்த ஆண்டு தொடர்பான செலுத்தப்படாத விளம்பரப் பலகைகளுக்கான கட்டணத்தை செலுத்துமாறு உரிய நிறுவனங்களுக்கு எழுத்து	நிலுவை வருமானத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்க

தொகை 2025 மே மாதம் வரை வசூலிக்கப்படவில்லை.	மூலமும், வாய்மொழி மூலமும் அவ்வப்போது தெரிவித்தும், கட்டணம் செலுத்தாததால் இந்த விளம்பரப் பலகைகளை அகற்றுமாறு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசுகள்
(அ)	மாநகர சபையின் ஊழியர்கள் அல்லாத 22 குடியிருப்பாளர்கள் தற்போது மல்வல வீதி மற்றும் ஜலாஷய வீதி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள 22 வீடுகளில் ஒப்பந்தம் செய்து வாடகை செலுத்தாமல் வசித்து வந்த போதிலும், ஒப்பந்தத்தின்படி வாடகையை வசூலிக்கவோ அல்லது அந்த வீடுகளை சபைக்கு திரும்பப் பெறவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	தேசிய அரசுப் பேரவையின் 1978 இன் 12 ஆம் ஆம் அலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் உத்தியோகபூர்வ வீடுகள் (உடைமையை மீண்டும் சுவீகரித்தல்) சட்டத்தின் கீழ் அல்லது 1969 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க அரச உத்தியோகபூர்வ இல்லங்களை சுவீகரிக்கும் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	அந்த வீடுகளை சபைக்கு திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	இரத்தினபுரி வழக்கறிஞர் சங்கத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட அப்பர் கிளப் கட்டிடம் திரும்பப் பெறப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாகியும், 2025 மே மாதம் வரை அது இன்னும் விளைவற்றதாகவே காணப்பட்டது. மேலும், அந்த ஆதனங்களை வருமானமீட்டும் பணிகளில் ஈடுபடுத்துவதற்கு 2023 திசெம்பர் மாதம் நியமிக்கப்பட்ட குழுவிற்கு, சொத்து முழுமையடையாததால் வருமானம் ஈட்டும் நோக்கங்களுக்காக புதிய அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தியிருந்தாலும், 2025 மே வரையிலும் முறையான செயற்திட்டத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.	வழககறிஞர் சங்கத்தால் வழக்கை மீண்டும் தாக்கல் செய்வதமையின் காரணமாக வழக்கில் முடிவு பெறுவதற்கு முன்பு, செயற்திட்டத்திற்கு செலவினம் மேற்கொள்வதில் சிக்கல் நிலை உள்ளதால், தற்போது ஆளுநருக்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ள ரூபா 1,600,000 மதிப்பீட்டின் ஒப்புதலுக்குப் பிறகு மேலும் பணிகளை மேற்கொள்ள முடியும் என்பது.	தொடர்புடைய ஆதனங்களை திறம்பட பயன்படுத்த வேண்டும்.
(இ)	ரூபா 392,896,497 கூட்டுப் பெறுமதியான 03 சொத்து விடயங்களுக்குரிய சொத்துப் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிராததுடன், விரிவான பட்டோலைகள் தயாரிக்கப்படவில்லை.	திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துப் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு விரிவான பட்டோலைகள் தயாரிக்கப்பட வேண்டும்.

(ஈ)	பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்படும் ரூபா 165,974 தொகையான மதிப்பிழந்த காசோலை நிலுவைத் தொகை தீர்க்கப்படவில்லை.	திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவைத் தொகையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	04 ஆண்டுகளாக முன்கொண்டுவரப்படும் ரூபா 18,913,594 தொகையான உள்ளக பண மாற்றல்கள் கணக்கின் செலவு மீதி தீர்க்கப்படவில்லை.	நிலுவைத் தொகையை மீண்டும் சரிபார்த்து தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவைத் தொகையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஊ)	2021 ஆம் ஆண்டுக்கு முன்னர் தொடக்கம் முன் கொண்டு செல்லப்பட்ட ரூபா 1,559,433 மற்றும் ரூ. 600,254 துறை திட்டக் கடன்கள் மற்றும் டிராக்டர் கடன்கள் அடையாளம் காணப்பட்டு தீர்க்கப்படவில்லை.	உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து உறுதிப்படுத்தல் பெற்ற பிறகு அதை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவைத் தொகையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(எ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அறவிடப்பட வேண்டிய ரூபா 8,397,991 தொகையான விடுதி வாடகையை நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து இரத்தினபுரி மாநகர சபையால் பெற்ற கடன் தொகைக்கு எதிராக நிலுவையில் உள்ள விடுதி வாடகை ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டாறு உள்ளது.	நிலுவைத் வருமானத்தை வசூலிக்க அல்லது கடன் தொகை ஈடு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2002 மார்ச் 13 ஆந் திகதி அன்று கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் நிபந்தனை எண் 03 இன் படி, ஒவ்வொரு 05 வருடங்களுக்கும் பழைய பேருந்து நிலைய வணிக வளாகத்தின் குத்தகைக்கான 2022 ஆம் ஆண்டில் மதிப்பீட்டுத் திணைக்களத்தால மாதாந்திர சந்தை வாடகை ரூபா 460,000 ஆக மதிப்பிடப்பட்டது. இது சம்பந்தமாக, 2022 ஆகஸ்ட் 24 அன்று நடைபெற்ற கலந்துரையாடலின் போது, சபை மற்றும் குத்தகைதாரர்களும் புதிய மதிப்பிடப்பட்ட வாடகையை செலுத்தவும் புதிய ஒப்பந்தத்தில் ஈடுபடவும் ஒப்புக்கொண்டனர், ஆனால் 2024 திசெம்பர் வரையிலும் புதிய மதிப்பிடப்பட்ட வாடகை வசூலிக்கப்படாததால், சபையின் நிதியத்திற்கு ரூபா	புதிய மதிப்பீட்டு அறிக்கை மற்றும் குத்தகை ஒப்பந்தத்தை பரிசீலித்த பிறகு வாடகையை எவ்வாறு திருத்துவது என்பது குறித்து சட்ட அதிகாரியிடம் ஆலோசிக்கப்பட்டது. அதன்படி, ஒப்பந்தத்தின்படி 2027 ஆம் ஆண்டில் குத்தகையை திருத்தியமைக்க முடியும் என்றும், 2022 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 240,000 தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	புதிய மதிப்பிடப்பட்ட வாடகை மற்றும் தாமதக் கட்டணங்களை வசூலிக்க தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

6,160,000 இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், 2022 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான காலத்திற்கான தாமதக் கட்டணமாக செலுத்த வேண்டிய ரூபா 240,000 தொகை வசூலிக்கப்படவில்லை.

(ஆ) 1987 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) பிரிவு 247இ(1) இன் படி, மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள எந்தவொரு நிலமும் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஏற்றதாகவோ அல்லது நிரந்தர அல்லது வழக்கமான சாகுபடிக்கு ஏற்றதாகவோ அல்லது சபையின் கருத்துப்படி, நியாயமான செலவில் நிலத்தை எந்த நோக்கத்திற்காகவும் அபிவிருத்தி செய்ய முடியும் எனில், சபையால் அவ்வாறு செய்யாவிட்டால், அந்த நிலத்தின் உரிமையாளருக்கு ஆண்டுதோறும் நிலத்தின் மூலதன மதிப்பில் 02 சதவீதத்திற்கு மிகாமல் வரி விதிக்கப்பட வேண்டும். 2019 மே 29 ஆம் திகதி நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தின் நிமிடக் குறிப்பில், நில உரிமையாளர்களிடமிருந்து தகவல்களைச் சேகரித்து சட்டத்தின்படி செயல்பட முடிவு செய்யப்பட்டிருந்தாலும், 2025 மே மாதம் வரை அத்தகைய நிலங்களை அடையாளம் கண்டு வரி விதிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தற்போது, இரத்தினபுரி மாநகர சபையின் எல்லைக்குள் உள்ள அபிவிருத்தி செய்யப்படாத காலி நிலங்கள், தரிசு நிலங்கள் மற்றும் பிற நிலங்கள் தொடர்பான தகவல்களைப் பெறுமாறு பிரதேச செயலகம் மற்றும் கமநலச் சேவைகள் திணைக்களத்திற்கு எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கை கிடைத்த பிறகு, ஒரு கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, தகவல் பெறப்பட்டு விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு, மதிப்பீடு கிடைத்த பிறகு மேலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாநகரச் சபைகள் கட்டளைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்

03/2022 இலக்கமுடைய மற்றும் 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரிவு XVI மற்றும் 08/2022 ஆம் இலக்கமுடைய 2022 நவம்பர் 25 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் மூலம் அரசு நிறுவனங்களால் நடத்தப்படும் விழாக்கள் மற்றும் திறப்பு விழாக்களுக்கு பொது

சபையின் கருத்துரைகள்

இரத்தினபுரி நகர பூங்காவின் கட்டுமானத் தொடக்க விழாவை ஏற்பாடு செய்வதற்காக செலவிடப்பட்ட பணம் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிர்வாக நிதியில் இருந்து திருப்பிச் செலுத்தப்படும் என்றும், செலவுகள் சபையால் ஏற்கப்பட்டதாகவும், ஏற்பட்ட செலவுகளை திருப்பிச் செலுத்த சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு கடிதங்கள்

சிபாரிசுகள்

சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு மாறாக ஏற்பட்ட செலவுகளை திருப்பிச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நிதியை செலவிட வேண்டாம் என்று அறிவுறுத்தியிருந்த நிலையில், அதற்கு மாறாக, 2024 மார்ச் 27 அன்று நடைபெற்ற இரத்தினபுரி புதிய நகர நகர பூங்காவின் கட்டுமானத் தொடக்க விழாவிற்கு மாநகர சபையின் நிதியிலிருந்து ரூபா 944,050 செலவிடப்பட்டுள்ளது.	அனுப்பப்பட்டுள்ளதாகவும் அன்று நடைபெற்ற கலந்துரையாடலின் போது தலைமைச் செயலாளர் தெரிவித்தார்.	

3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	கனதொல குப்பை கிடங்கின் கூரைக்காக வாங்கப்பட்ட மழைநீர் வடிகால் மற்றும் டவுன்பைப்கள் விவரக்குறிப்புகளுக்கு இணங்கவில்லை, ஆனால் அவை பரிந்துரைக்கப்பட்ட விவரக்குறிப்புகளுக்கு இணங்குவதாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பேரில் ரூபா 118,500 செலுத்தப்பட்டது.	மழைநீர் வடிகால் குழாய்கள் விவரக்குறிப்புகளின்படி வழங்கப்பட்டன, மேலும் கனதொல குப்பை கிடங்கில் பொருத்தப்பட்டுள்ளதாகவும், நீர் குழாய்களின் பொருத்தமான அளவு சந்தையில் கிடைக்காததால், அவற்றை விசேடமாக தயாரித்து இறக்குமதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.	பரிந்துரைக்கப்பட்ட விவரக்குறிப்புகளுக்கு இணங்காத பொருட்களுக்கு பணம் செலுத்தக்கூடாது.
(ஆ)	மாநகர சபையால் மீளாய்வாண்டில், கொள்வனவு செய்யப்பட்ட தார் பரிந்துரைக்கப்பட்ட தரத்திற்கு (SLS ISO 9001-2015) இணங்குகிறதா என்பதை சரிபார்க்காமல் ரூபா 1,350,000 செலுத்தப்பட்டிருந்தது.	தற்போது, நிலக்கீல் வாங்கும் போது, ஒவ்வொரு கட்டளைக்கும் தர சோதனை அறிக்கைகளைப் பெற்ற பிறகு கொள்முதல் செய்யப்படுகிறது.	பரிந்துரைக்கப்பட்ட தரத்துடன் இணங்குவதை சரிபார்த்த பிறகு பணம் செலுத்தப்பட வேண்டும்.

3.5 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	பொதுச் சந்தை மொத்த மீன் சந்தை கட்டுமானத் தொழிலில் 04 வேலை விடயங்களுக்கு ரூபா 551,800 அதிகமாக செலுத்தப்பட்டுள்ளது.	வேலை விடயங்கள் நிறைவு செய்யப்பட்ட காலப்பகுதிக்கு உரியதாக சங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின் படி சந்தை விலையைக் கருத்தில் கொண்டு பணம் செலுத்தப்பட்டுள்ளது.	கூடுதலாக செலுத்தப்பட்ட பணம் வசூலிக்கப்பட வேண்டும்.
(ஆ)	ரூபா 1,639,142 வேலைப் பெறுமதியுடைய பொதுச் சந்தை அணுகல் வீதியை Asphalt Concrete இடப்பட்டு புனரமைக்கும் பணி 2024 யூலை 20 ஆந் திகதி பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், அது தேவையான	வீதிகளின் முனைகளில் சரியாகச் சுருக்கப்படாத பிரிமிக்ஸ் (Primix) பாகங்கள் இருக்கலாம், அவற்றைத் துடைத்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும், மேலும் அவ்வாறு செய்த பிறகு ஏதேனும் உடைந்த பாகங்கள் காணப்பட்டால், பணியை	அபிவிருத்தித் திட்டங்கள் தேவையான தரத்தில் நிறைவு செய்யப்பட்டு, அவற்றின் கண்காணிப்பை முறைப்படுத்த

தரத்திற்கு நிறைவு செய்யப்படாத காரணத்தால் 2025 ஏப்ரல் வரை கற்கள் சாலையில் கழன்று சென்றவாறு காணப்பட்டன.	மேற்கொண்ட சங்கத்தால் அவற்றை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	வேண்டும்.

3.6 வாகனக் கட்டமைப்பு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
கைத்தவிர்க்கப்பட வேண்டிய வாகனங்களை அடையாளம் காண்பதற்கான தொழில்நுட்பக் குழுவால் பழுதுபார்த்து மீண்டும் சேவையில் சேர்க்க ஏற்றது என 2023 ஒக்தோபர் 16 ஆந் திகதி பரிந்துரைக்கப்பட்ட ஒரு டிப்பர் வாகனம் 2025 மே மாதம் வரையிலும் பழுதுபார்க்கப்படவில்லை.	இரத்னபுரியைச் சுற்றியுள்ள அங்கீகரிக்கப்பட்ட கேரேஜ்கள் இந்த வாகனத்தை பழுதுபார்ப்பதில் ஆர்வம் காட்டவில்லை என்பதால் வேறு நிறுவனத்தால் பழுதுபார்க்கப்பட வேண்டியிருந்தது.	பழுதுபார்ப்பு தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பில் நீண்டகால திட்டம் 2025 மே மாதம் வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2024-2026 காலகட்டத்துக்கான நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக.	நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.